**இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் - 2022**

------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களினூடாக 2022 திசெம்பா ் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள ் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்குரிய விடயங்களை வெளிப்படுத்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரிசோதிக்கும் பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவது எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உயர் நிலை உறுதிப்பாடொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எல்லா வேளையிலும் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. மோசடி மற்றும் தவறு தனியாகவோ அல்லது கூட்டாகவோ செல்வாக்குச் செலுத்துவதால் பொருண்மையான பிறழ் கூற்றுக்களானவை எழக்கூடுமென்பதுடன், அதன் பொருண்மையான தன்மை இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் மீது தங்கியுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்கள் மற்றும் உயர்தொழில் ஐயப்பாட்டுடன் செயற்பட்டேன். அத்துடன்,

- வெளியிடப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்கும் போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய பொருண்மையான தவறான கூற்றுக்களின் ஆபத்துக்களை இனங்கணுதல் மற்றும் மதிப்பீடு செய்தற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறான வெளிப்படுத்தல்கள் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களால் ஏற்படும் தாக்கங்களை விட மோசடியினால் ஏற்படும் தாக்கம் கூடியதாக காணப்படுவது அவை மோசடியான கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், பிழையாகக் காண்பித்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை தவிர்த்தல் போன்ற காரணங்களினால் ஏறபடுவதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி, உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என

முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள ˙கால வரையறைகளினுள்ளேயும ˙பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை**

| | குறித்த நியமத்துடனான தொடர்பு | முகாமைத்துவத்தின் கருந்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 15 ஆம் பிரிவு பிரகாரம், கூட்டுத்தாபனத்தினால் பிற்போடப்பட்ட வரிப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் இனங்கண்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன். பிற்போடப்பட்ட வரி சீராக்கம் 2023 நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் பிற்போடப்பட்ட வரி சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தி பிரகாரம், நடைமுறையல்லா சொத்துக்களிற்காக எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு | அவதானிப்புடன் இணங்குகிறேன். முழுமையாக தேய்வடைந்த அல்லது முன்கொண்டு செல்லும் பெறுமானம் பூச்சியமாக நிலவும் | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் சொத்துக்களின் பயனள்ள ஆயட்காலத்தை |

| | | | |
|---|---|---|---|
| | செய்யாததால் ரூபா 133,557,771 ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டுள்ள போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அந்த சொத்துக்களின் பயனுள்ள ஆயட்காலத்தை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரமான மதிப்பீட்டுத் தவறை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 பிரகாரம் மீள்திருத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொட்டுனரக் கூடிய நடைமுறையல்லா சொத்துக்கள் (ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்கள்) உள்ளடங்களாக கூட்டுத்தாபனத்தின் அனைத்து தொட்டுனரக் கூடிய நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமானங்களை மீள் மதிப்பீடு செய்யும் நடவடிக்கையை ஆரம்பிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே மோட்டார் வாகனங்கள் தவிர ஏனைய தொட்டுனரக் கூடிய நடைமுறையல்லாத சொர்துக்கள் தொடர்பாக முறையாக கணிப்பீடொன்றை மேற்கொண்டு மீள்மதிப்பீடு செய்யும் நடவடிக்கையை பூர்த்தி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 79 ஆம் பிரிவு பிரகாரம் தற்போது பயன்படுத்தப்படும் முழுமையாக தேய்விடப்பட்ட ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்களின் மொத்த முன்கொண்டு செல்ல்படும் பெறுமானத்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதும் முழுமையாக தேய்விட்டப்பட்ட கிரயம் ரூபா 133,557,771 ஆன ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன். சொத்துக்களின் பெறுமானத்தை மீள் மதிப்பிடும் நடவடிக்கையை பூர்த்தி செய்தவுடன் இந்த கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்படும் சொத்துக்களின் மொத்த முன்கொண்டு செல்லப்படும் பெறுமானங்களை எதிர்வரும் நிதியாண்டுகளில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் முன்கொண் செல்லப்படும் பெறுமானங்களை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 139 பந்தி பிரகாரம் ஓய்வூதிய பணிக்கொடை ஒதுக்கம் ஒழுங்கான முதலீட்டு திட்டமொன்றின் பிரகாரம் முதலீடு செய்ய வேண்டிய போதும் மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று ஓய்வூதிய பணிக்கொடை ஒதுக்கக் கணக்கில் ரூபா 35,789,916 ஆன மீதிக்கு நேரொத்ததாக எவ்வித முதலீடும் செய்திருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகிறேன். நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பணிக்கொடை ஒதுக்க மீதிக்கு நேரொத்ததாக மாதாந்தம் ரூபா 100,000 வீதமாகுமாறு முதலீடு செய்ய பணிப்பாளர் சபை அங்கீகாரம் மற்றும் விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்துடனும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு கடதமொர்ன்று அனுப்பப்பட்டள்ளதுடன், அதன் பிரகாரம் குறித்த அங்கீகாரம் கிடைத்தவுடன் தேவையான முன்நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 135 (ஆ) பந்தி பிரகாரம் நிறுவனமொன்றினால் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நலன்கள் திட்டத்திற்காக ஆரம்ப மீதி முதல் இறுதி மீதி வரை ஒப்பீடு செய்தலொன்றை முன்வைத்திருக்கவில்லை. கூட்டுத்தாபனத்தினால் அதன் நடைமுறை சேவை கிரயம், வட்டி வருமானம் அல்லது செலவு, மீளாய்வாண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் ஆயுள்கணிப்பீட்டு நலன்கள் இலாபம்/நட்டம் போன்ற உருப்படிகளை வெவ்வேறாக காண்பிக்க வேண்டிய போதும் நிதிநிலைமை கூற்றில் வரையறை செய்யப்பட்ட நலன்கள் திட்டத்திற்குரிய குறிப்பில் அதன் கூட்டுத்தொகை ஆண்டிற்கான செலவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்குகிறேன். வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நலன்கள் திட்டத்திற்காக வெவ்வேறாக சமர்ப்பிக்க வேண்டிய தகவல்களை 2023 ஆண்டு முதல் குறித்த கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நலன்கள் திட்டத்திற்காக ஆரம்ப மீதி முதல் இறுதி மீதி வரை ஒப்பீடொன்றை முன்வைக்க வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனம் புத்தளம் மாவட்டத்தின் எழுவன்குலம் பெறுந்தோட்டத்தில் 2000 ஆண்டில் பயிரிட்ட தேக்க கன்றுகள் 2022 ஆண்டளவில் மரங்களை பெற்றுக் கொள்ளக்கூடிய நிலை வரை வளர்ந்துள்ள மரங்கள் சுமாராக 3,350 ஆன போதும், அந்த மரங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்திருக்கவில்லை. | எழுவன்குலம் பெறுந்தோட்டத்தில் தேக்க மரங்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அந்த மதிப்பீட்டின் உண்மை தன்மையை உறுதி செய்து கொள்ள குறித்த மதிப்பீடு அறிக்கையை அரச மரக்கூட்டுத்தானத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அந்த பெறுந்தோட்டத்தின் சட்ட ரீதியான உரிமையை கூட்டுத்தாபனத்திற்கு சுவீகரிக்கும் நடவடிக்கைகள் இதுவரை பூர்த்தியாகாததால் அந்த தேக்க மரங்களின் மதிப்பீட்டுப் பெறுமதியை கூட்டுத்தாபன கணக்கு புத்தகங்களிற்கு உள்ளடக்கும் இயலுமை இல்லை. | மரங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்க வேண்டும். |

### 1.5.3 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 முதல் 2022 வரையான காலப் பகுதியினுள் அரச மானியத்தை கவனிக்காது கடந்த 05 ஆண்டுகளினுள் கூட்டுத்தாபன நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட நட்டம் ரூபா 134,800,425 முதல் ரூபா 102,312,523 வரையான வீச்சளவை கொண்டிருந்தது. இதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டு நட்டம், ஆளணியினர் வெற்றிடம், காணப்படும் மரமுந்திரிகை தோட்டங்கள் உச்ச அளவில் பயிரிடப்படாமையினால் உற்பத்தி குறைவடைந்தமை போன்ற காரணங்களின் மீது அரச மானியம் இல்லாது கூட்டுத்தாபனத்தின் தொடர்நதியங்கும் தன்மை சவாலாக இருப்பதாக அவதானிக்கப்பட்டது. | கூட்டுத்தாபன விற்பனை மற்றும் ஏனைய வருமானங்களை மேலும் அதிகரித்துக் கொண்டு மற்றும் செலவுகளை உரியவாறு முகாமை செய்து இலாபத்தை வளர்த்துக் கொள்ள எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தியுள்ளதுடன், அதன் பிரகாரம் தேவையான முன்நடவடிக்கை எடுக்கப்படும். | நட்டம், ஆளணியினர் வெற்றிடம் மற்றும் பயிரிடப்படாமை காரணமாக உற்பத்தி குறைவடைந்தமை தொடர்பில் கவனத்துடன் நடவடிக்கை எடுத்து கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையை உறுதி செய்து கொள்ள வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் கடன் அறவிடும் கால எல்லை 60 நாட்களான போதும் 90 நாட்களை விஞ்சிய வியாபார கடன்படுனர் மீதி ரூபா 2,994,271 ஆகும். அம் மீதியினுள் உள்ளடங்கும் இரண்டு ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவியது, கொழும்பு பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனமொன்றிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,499,410 ஆன கடன் மீதியை அறவிட முறையாக நடடிவக்கை எடுத்திருக்கவில்லை. | சலுகை கால எல்லையை விஞ்சிய ரூபா 2,994,271 ஆன வியாபார கடன்படுனர் மீதியிலிருந்து 2023.09.30 திகதி வரை ரூபா 1,296,771 தொகை அறவிட்டு எஞ்சிய மீதியையும் விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். ரூபா 1,499,410 ஆன கடன்படுனர் மீதியை (லிசல என்டபிரய்சஸ் நிறுவனம்) அறவிட நீண்ட காலமாக எடுக்கப்பட்ட முயற்சி தோல்வி அடைந்துள்ளதால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான ஆலோசனை பெற்றுக் கொள்ள சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதியை அறவிட முறையாக நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அதன் போது நிலவிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு ரூபா 9,466,200 ஆன மரமுந்திரிகை கன்றுகளை வழங்கி 10 ஆண்டுகள் கடந்திருந்தன. குறித்த அமைச்சு தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் அந்தக் கடனை அறவிடும் இயலுமை இல்லையென அவதானிக்கப்படுகிறது. | தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 9,466,200 ஆன கடன்படுனர் மீதியை மற்றும் இக் கூட்டுத்தாபனத்தினால் அரச நெல் விற்பனை சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா | பெற வேண்டிய கடன் மீதி தொடர்பாக தாமதமின்றி தேவையான நடவடிக்கைகளை எடுக்க செயற்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | 3,500,000 ஆன கடன் மீதி தொடர்பாக ஆலோசனை பெற்றுக் கொள்வதற்காக திறைசேரியின் அரச பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ள போதும் குறித்த பதிலீட்டிற்காக இட்ப்பாடு இல்லையெனவும், மேல் அறவிட வேண்டிய கடன்படுனர் மீதி தொடர்பாக கூட்டுத்தாபன கணக்காய்வுக் குழு பரிந்துரை மீது முன்நடவடிக்கை எடுக்குமாறும் பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து எழுத்து மூலம் அறிவுறுத்தல் கிடைத்துள்ளது. | |
| (இ) | 01 ஆண்டை விஞ்சிய ஏனைய கடன்படுனர் பெறுமதி ரூபா 18,857,611 ஆன போதும் ஏனைய கடன்படுனர்களிற்காக ஒதுக்கப்பட்ட நட்டக் கழிவு நட்டம் ரூபா 2,106,184 ஆகும். 2018 ஆண்டு முதல் ஏனைய கடன்படுனர்களிற்காக நட்டக் கழிவு நட்டமாக ஒவ்வொறு ஆண்டும் ஒரே பெறுமானத்தை பேணியுள்ள போதும் அப் பெறுமானம் வருடாந்தம் நாளாதுவரையாக்கல் அல்லது பெறுமானங்கள் பதிவழித்தல் அல்லது ஏனை முயற்சிக்கள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டக் கழிவு நட்டம் ஒதுக்கம் செய்யப்படாத திரவத்தன்மையான கடன்படுனர் மீதி தொடர்பாகவும் கவனம் செலுத்தி தற்போது நட்டக் கழிவு ஒதுக்குவது தொடர்பாக தேவையான திருத்தங்களை 2023 ஆண்டு நிதிக்கூற்றுக்களிற்கு உரியவாறு கணக்குகளை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நட்டக் கழிவு நட்டத்திற்கான ஒதுக்கம் வருடாந்தம் நாளாதுவரையாக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதன் போது நிலவிய கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் தலையீட்டுடன் தோல் மரமுந்திரிகை கொள்வனவு செய்வதற்காக 2005 ஆண்டில் மீள் செலுத்தும் அடிப்படையில் நெல் விற்பனை சபையிலிருந்து பெற்றுக் கொண்ட ரூபா 3,500,000 தொகை மற்றும் அதற்குரிய வட்டியான ரூபா 927,500 தொகையை மீளாய்வாண்டு வரை செலுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நெல் விற்பனை சபையில் இலிருந்து பெற்றுக் கொண்ட கடன் தொகை, கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டியுள்ள அரச கடன் தொகைக்கு எதிராக பதிலீடு செய்ய பொது முயற்சிகள் திணைக்களத்திடம் அங்கீகாரம் கோரிய போதும் அதற்காக அங்கீகாரம் கிடைக்கவில்லை. இந்த செலுத்த வேண்டிய கடன் பெறுமதி தொடர்பாக கலந்துரையாடி தீர்மானத்திற்கு வர நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய கணக்கு மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபன ஊழியர்களிற்காக பேணிச் செல்லப்படும் காப்புறுதிக் காப்பினூடாக ஊழியர்களிற்கு செலுத்த வேண்டிய ஊழியர்களின் | 2023.11.30 திகதி வரை ரூபா 1,834,738 தொகை குறித்த ஆளணியினரிற்கு செலுத்தியுள்ளதுடன் | செலுத்த வேண்டிய கணக்கு மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| மருத்துவ பட்டியல் மீள்நிரப்பிற்கு 02 ஆண்டுகளிற்கு முன்னர் செலுத்தவிருந்த ரூபா 1,300,431 தொகை மற்றும் ஓராண்டிற்கு முன்னர் செலுத்தவிருந்த ரூபா 2,653,907 தொகையாக கூட்டுத் தொகை ரூபா 3,954,338 குறித்த நலனாளர்களிற்கு செலுத்தாது செலுத்த வேண்டிய கடன்கொடுனர் மீதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | செலுத்துவதற்கு எஞ்சியுள்ள பெறுமதி ரூபா 2,119,600 ஆகும். இந்த மருத்துவ உதவித் தொகை கொடுப்பனவு செய்யப்படுவது கூட்டுத்தாபனத்தினால் உழைக்கும் நிதியத்தினால் ஆகையால் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக குறித்த கொடுப்பனவு தாமதமாகியுள்ளது. கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை சுமுகமான பின்னர் மீதித் தொகை செலுத்தப்படும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2011 ஆண்டு முதல் வருமான வரி செலுத்த மற்றும் வருமான வரி அறிக்கை சமர்ப்பிக்க நடவடிகக்கை எடுத்திருக்கவில்லை. எனினும் நிதிக்கூற்றுக்களில் அக்காலப் பகுதிக்குரியதாக ரூபா 779,483 ஆன நிறுத்திய வரி (WHT) பெற வேண்டிய மீதிகள் காண்பிக்கப்பட்டிருந்தன. | அவதானிப்புடன் இணங்குகிறேன். தற்போது குறித்த வருமான வரி அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருவதுடன், கனிஷமான ஆண்டுகளின் வருமான வரி அறிக்கைகளும் தயாரிக்கப்பட வேண்டியுள்ளதால் அதற்காக கனிஷமான காலம் செலவாகின்றது. அதன் பிரகாரம் கூடிய விரைவில் குறித்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்து அந்த அறிக்கைகளை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த வருமான அறிக்கைகளை தயாரித்து, சமர்பிக்க வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 18 ஆம் பிரிவு | பட்டியல் பத்திரத்தில் குறிப்பிடும் திகதி முதல் முப்பது நாட்களினுள் கணக்காய்வு கட்டணத்தை தீர்க்க வேண்டிய போதும் 2023 ஜுன் 23 திகதியன்று கணக்காய்வுக் கட்டணமான ரூபா 930,000 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்துவதற்காக எஞ்சியுள்ள தொகையையும் கூடிய விரைவில் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை கணக்காய்வுக் கட்டணத்தை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும. |
| (இ) | 2012 ஜுலை 24 திகதிய பொது முயற்சிகள் மீதான செயற்குழு தீர்மானம் | கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியான உரிமையற்ற காணிகளில் சட்டரீரியான உரிமையை சுவீகரிக்க | 2012 ஜுலை 24 திகதிய பொது முயற்சிகள் மீதான செயற்குழு தீர்மானம் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் | செயற்குழு தீர்மானம் பிரகாரம் சட்டரீதியான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்குமாறு பொது முயற்ச்சிகள் மீதான செயற்குழுபினால் அறிவித்திருந்த போதும், 2012 ஜுலை 24 திகதிற்கு முன்னர் மற்றும் 2012 ஜுலை 24 திகதிற்கு பின்னர் கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தும் பிரதேச செயலகம் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் வழங்கியுள்ள 11,363 ஏக்கர் காணியின் சட்டரீதியாக உரிமையை கூட்டுத்தாபனத்திற்கு சுவீகரிப்பதற்குரிய நடவடிக்கைகளை 2022 திசெம்பர் 31 திகதி வரை முடிவுறுத்தி இருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியான உரிமையை சுவீகரிக்கப்படாத தோட்டங்கள்/விதை பூங்காக்களின் காணி ஏக்கர் அளவு 2370 ஏக்கர்கள் அளவாகும். 2012 ஆண்டளவில் இந்த கூட்டுத்தாபனத்திற்று உரிமையற்றதாக இருந்த போதும் பிற்காலத்தல் பல்வேறு தரப்பினர்களிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்துள்ள போதும் இன்னும் சட்டரீதியான உரிமையை சுவீகரித்திற்கொள்ளாத காணி ஏக்கர் 8993 ஆனது. காணிகளின் உரிமையை சுவீகரித்திறகொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரித்தற்ற காணிகளின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | திறைசேரி செயலாளரின் 2021 நவம்பர் 16 திகதிய PED/01/2021 இலக்க பொது முயற்ச்சிகள் தொடர்பான சுற்றறிக்கையின், பொது முயற்ச்சிகளின் நல்லாளுகைக்கான வெளியிடப்பட்ட கைநுளில் 66 ஆம் பந்தி | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் வரைபு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள், கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதியுடன் வரிசை அமைச்சுக்கு மற்றும் திறைசேரியின் பொது முயற்ச்சிகள் திணைக்களத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டிய போதும் கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆண்டிறுதி கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது 2023 செப்தெம்பர் 12 ஆம் திகதியாகும். | அவதானிப்புடன் இணங்குகிறேன். பல்வேறு நடைமுறை காரணம் மீது கடந்த ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்க தாமதங்களை தவிர்துக் கொண்டு 2022 ஆண்டு வரை நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்துள்ளதுடன், 2023 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் உரிய திகதிற்கு தயாரித்து குறித்த அரச நிறுவனங்களிற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுருத்தல் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்பிக்கப்பட வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அலுவலர்களினது மற்றும் ஊழியர்களினது தொழில் சங்கங்கள் மற்றும் நலன்புரி சங்கங்களில் பங்களிப்பு தொகையாக சம்பளத்திளிலிருந்து குறைக்கப்பட்ட ரூபா 1,807,121 ஆன தவணை தொகை 2022 திசெம்பர் 31 | ரூபா 1,807,121 ஆன தவணை தொகையிலிருந்து ரூபா 1,681,598 ஆன தொகையொன்று குறித்த சங்கங்களிற்கு செலுத்தப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்தில் நிலவிய நிதி நெருக்கடி காரணமாக இங்கு குறிப்பிடப்படும் நிலைமை | அலுவலர்களினது மற்றும் ஊழியர்களினது தொழில் சங்கங்களிற்கு செலுத்த வேண்டிய தொகை |

| | | | |
|---|---|---|---|
| | திகதியன்றும் அச் சங்கங்களிற்கு செலவு வைக்காது கூட்டுத்தாபனத்தின் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஏற்பட்டுள்ளதுடன், எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இந்த சம்பளத்திளிலிருந்து மேற்கொள்ளப்படும் அறவீடுகள் உரிய சந்தர்ப்பதிலையே அச் சங்கங்களிற்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்தின் கடமைகளிற்காக பயன்படுத்தக் கூடாது. |
| (ஆ) | கொண்டச்சி தோட்ட மறுசீரமைப்பின் கீழ் யானை வேலி அமைத்தல், உழவு இயந்திரங்கள் மற்றும் தண்ணீர் பவுசர்கள் கொள்வனவு செய்தல் மற்றும் கட்டிட நிர்மாணம் ஆகிய முக்கிய பணிகளிற்காக கரும்பு, சோளம், முந்திரி, மிளகு, கருவா, கிராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்களை அபிவிருத்தி செய்தல், சார்நத கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சிடமிருந்து கிடைத்த ரூபா 225,000,000 தொகையிலிருந்து 2022 திசெம்பர் 31 திகதியளவில் கூட்டுத்தாபனம் தோல் முந்திரிகையை கொள்வனவு செய்ய ரூபா 9,000,000 தொகையை பயன்படுத்தியிருந்தது. | கொண்டச்சி தோட்டத்தில் நிலவும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் முந்திரிகை பயிர்ச் செய்கை பிரிவிலிருந்து கிடைக்கும் தோல் மரமுந்திரிகை விளைச்சல், அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த கூட்டுத்தாபனத்திற்கு கொள்வனவு செய்ய கடப்பாடு காணப்படுவதால், 2022 ஆண்டினுள் அந்த திணைக்களத்தினால் மேற்படி சேகரித்திருந்த தோல் முந்திரிகை விளைச்சலை கொள்வனவு செய்ய இந்த ரூபா 9,000,000 தொகையை குறித்த மறுசீரமைப்பு கருத்திட்ட ஏற்பாடுகளிலிருந்து பயன்படுத்தியுள்ள போதும் தற்போது அந்தத் தொகை மீண்டும் மறுசீரமைப்பு கருதிட்டத்திற்கு தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. | கருதிட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியை திறமையாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 14,471,411 ஆன இலாபமாக காணப்பட்டதுடன் அதனோடு நேரொத்த கடந்த வருடத்தின் நட்டம் ரூபா 16,412,185 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 30,883,596 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டினுள் மீண்டெழும் மானியங்கள் ரூபா 12,700,000 இனால் மற்றும் வருமானமாக இனங்காணப்பட்ட மூலதன மாணியங்கள் ரூபா 11,085,762 ஆன அளவினால் அதிகரித்தமை, மன்னார் மாவட்டத்தில் கெண்டச்சி தோட்டத்தில் சிறுபயிர் செய்கை ஊடாக ஆண்டினுள் ரூபா 6,437,392 ஆன வருமானமொன்று கிடைப்பனவு பிரதானமாக காரணமாகியுள்ள போதும் ஆண்டினுள் மரமுந்திரிகை விற்பனை வருமானம், கடந்த ஆண்டிற்கு ஒப்பாக 3.1 சதவீதத்தால் குறைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தோல் மரமுந்திரிகை, மரமுந்திரிகை பருப்பு மற்றும் மரமுந்திரிகை கன்றுகளின் அலகுக் கிரயத்தை கணக்கிடும் போது சரியான ஏற்றுக் கொண்ட முறைமையொன்று தாபிக்கப்படாததன் காரணமாக | கூட்டுத்தாபன அலுவலர்களுடன்கூடிய குழு ஒன்றின் மூலம் தற்போது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கிரயத்தின் கணப்பீடுகளின் பூர்வாங்க நடவடிக்கைகள் பூர்த்தி | உற்பத்தி கிரயத்தை வெவ்வேறாக கணிப்பிடும் சரியான முறையை ஒன்றை பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கு அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 72,093,677 ஆன இறுதி இருப்புப் பெறுமதியின் சரியான தன்மையை பரீட்சிக்க முடியவில்லை. | செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் கூடிய விரைவில் குறித்த கிரயத்தை கணப்பிடும் முறைமையை பூர்த்தி செய்து, அதற்காக தேசிய கணக்காய்வு அலுவலக அலுவலர்களின் ஒருமைப்பாட்டை பெற்றுக் கொண்டு, 2023 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது குறித்த முறைமையை பயன்படுத்தி இறுதி இருப்புக்களின் பெறுமதிகளை கணக்கிட்டு அந்த நிதிக்கூற்றுக்களிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிப்பதற்காக வெளியிடப்பட்ட இலக்கம் 60/07 மற்றும் 1973 மே 25 திகதிய வர்த்தமானி அறிவித்தலின் முதலாம் அட்டவணையின் (அ), (இ), (ஈ), (ஊ) மற்றும் (ஏ) பிரிவுகளில் குறிப்பிடப்படும் விடயங்களை மேற்கொள்வது தொடர்பில் 2013 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலத்தினுள் மிகவும் குறைந்த கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதாவது அமைச்சரிற்கு ஆலோசனை வழங்குதல், மரமுந்திரிகை உற்பத்தியை செயலாக்குதல், விற்பனை மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்தல், பகிரங்கப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பில் வெளித்தரப்பினருடன் இணைந்து செயற்படுதல் மற்றும் புலனாய்வு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கவில்லை. குறித்த தகவல்கள் மற்றும் ஆலோசனை வழங்கும் போது விடயப் பொறுப்பு அமைச்சு (தற்போது கமநல மற்றும் பெறுந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு) ஊடாக குறித்த தகவல்கள் கூட்டுத்தாபனத்தின் ஊடாக கோரப்படுவதுடன், கூட்டுத்தாபனத்தினால் அத் தகவல்கள் வழங்கப்படுகின்றன.<br>அதற்கு மேலதிகமாக எழக்கூடிய அவசர, விஷேட மற்றும் ஏனைய விடய சார் விடயங்களில் விடயப் பொறுப்பு அமைச்சினால் நடாத்தப்படும் கூட்டங்களில் விடயத் தொடர்பு அலுவலர்களினால் அவர்களின் கருத்துக்கள், குறித்த தகவல்கள் மற்று நிபுணத்துவ கருத்துக்கள் முன்வைக்கப்படும்.<br>கூட்டுத்தாபனத்தினால் தலையிட வேண்டிய அதன் அடிப்படை நோக்கங்களிற்கு மாற்றமான விடங்களில் அது தொடர்பாக மதிப்பிற்குரிய அமைச்சரின் கவனத்தை செலுத்த விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக/உடமையில் காணப்படும் 13 தோட்டங்களின் காணிகளின் அளவு 11,363 ஏக்கர்களாவதுடன் அவற்றின் 3,449 ஏக்கர்களில் மரமுந்திரிகை | கூட்டுத்தாபனத்தை ஆரம்பித்து 50 ஆண்டுகள் கடந்திருந்த போதும் மொத்த காணி 11,363 ஏக்கர்கள் அளவில் 79 சதவீதம் 2012 ஆண்டின் பின்னரே இந்த கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாகியுள்ளது. மொத்த காணி | கூட்டுத்தாபனத்தினால் பயிரிடப்படாத வெற்றுக் காணிகளை பயிரிடுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயிரிடப்பட்டிருந்ததுடன், மரமுந்திரிகை பயிரிடப்படாத காணிகளின் சதவீதம் 70 சதவீதமாக இருந்தது. அந்த வெற்று காணிகளில் பயிரிடுவதற்காக கூட்டுத்தாபனத்தினால் ஆக்கபூர்வ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அளவில் மன்னார் கொண்டச்சி தோட்டம் மற்றும் மட்டக்களப்பு மான்கர்னி தோட்டம் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு மரமுந்திரிகை பயிர் செய்கைக்காக வழங்கி 1,600 ஏக்கர் காணிப் பகுதியில் வெற்றிகரமாக மரமுந்திரிகை பயிரிடப்பட்டுள்ளது. அவ்வாறே மரமுந்திரிகை பயிரிட அல்லது ஏனைய பயிர்களை பயிரிட முடியாத 552 ஏக்கர் காணி அளவும் காணப்படுகின்றன. | |
| (ஈ) | கூட்டுத்தாபனம் மரமுந்திரிகை பயிரிட்ட 3,449 ஏக்கர் காணியில் ஒட்டு மரமுந்திரிகை கன்றுகள் ஒரு ஏக்கரிற்கு 70 உம் விதை மரமுந்திரிகை கன்றுகள் ஏக்கரிற்கு 40 கன்றுகள் வீதம் பயிரிட்டு 2022 ஆண்டில் மரமுந்திரிகை விளைச்சல் 88.24 மெட்ரிக் டொ்ன் ஆனதில் ஒரு ஏக்கரிற்கு மரமுந்திரிகை விளைச்சல் 25.38 கிலோ கிராம் ஆன குறைந்த பெறுமானத்தை பெற்றிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் அந்த தோட்டங்களில் விளைச்சல் தரும் மரமுந்திரிகை மரங்களின் அளவு 51,685 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் ஒரு மரமுந்திரிகை மரத்தின் சராசரி விளைச்சல் 1.71 கிலோ கிராமான பலவீன நிலையில் காணப்பட்டது. | கூட்டுத்தாபன அனேக தோட்டங்களில் மிகப் பழைய மரமுந்திரிகை பயிர்கள் காணப்படுவதுடன், அவ்வாறு காணப்படும் மரமுந்திரிகை மரங்களின் அளவு ஏற்றுக் கொண்ட மரமுந்திரிகை அளவை விட மிகவும் குறைந்த அளவை கொண்டுள்ளது. அவ்வாறே காட்டு யானை சேதம், மர மற்றும் வேர்களை துளைக்கும் வண்டு சேதம் போன்ற காரணங்களினாலும் மரமுந்திரிகை மரங்கள் பெறுமளவில் குறைவடைந்துள்ளது. 2022 ஆண்டில் காணப்பட்ட மரமுந்திரிகை பயிர்களிற்கு பாதகமான காலநிலை மற்றும் வானிலை நிலைமைகள் காரணமாக முழு நாட்டிலும் தோல் மரிமுந்திரிகை விளைச்சல் கீழ் மட்டத்தில் காணப்பட்டதுடன், 2020 ஆண்டினுள் இந்த கூட்டுத்தாபன தோட்டங்களின் ஊடாக ஒன்று திரட்டப்பட்ட தோல் மரமுந்திரிகை விளைச்சல் 5.043 கிலோ கிராமிற்கு கிட்டிய அளவில் காணப்பட்டது. | மரமுந்திரிகை விளைச்சல் ஏற்றுக் கொள்ள முடியாத மட்டத்திற்கு குறைவடைதல் அறிக்கையிடப்பட்டுள்ள துடன் மரமுந்திரிகை வளர்ச்சிக்கு முயற்சி எடுக்க வேண்டும். மரமுந்திரிகை தோட்ட நிர்வாகம் மற்றும் விளைச்சல் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக சிறப்பான உள்ளக கட்டுப்பாடொன்றை செயற்படுத்த வேண்டும். |
| (உ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான புத்தளத்தின் கமந்தலுவ மற்றும் அம்பாறை ஹாடி தோட்டங்களில் தென்னை மரங்களின் எண்ணிக்கை முறையே 3,358 மற்றும் 826 ஆனதுடன், 1,147 முதிர்ச்சி அடையாத, 2,391 விளைச்சல் தரும் மற்றும் 646 வயதடைந்தவை எனக் கொண்டிருந்தன. 2022 ஆண்டில் தென்னை விளைச்சல் 90,304 தேங்காய்களானதுடன் அதன் விற்பனை வருமானம் ரூபா 4,427,439 | நாட்டில் நிலவிய நெருக்கடியான நிலைமை மற்றும் கூட்டுத்தாபன சீரற்ற நிதி நிலைமையின் பிரகாரம் கடந்த கிட்டிய 05 ஆண்டுகளாக தென்னை பயிர்களிற்கு தேவையான இரசாயன பசளை இடப்படாததால் விளைச்சல் கனிசமான அளவு குறைந்துள்ளது.<br>நடைமுறையாண்டில் தென்னை பயிர்களிற்காக பசளை கொள்வனவு செய்ய தேவையான | தென்னை விளைச்சலை அதிகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகவிருந்தது. அதன் பிரகாரம் ஒரு மரத்தின் வருடாந்த தென்னை விளைச்சல் 38 தேங்காய்களானதுடன் விற்பனை வருமானம் ரூபா 1,863 வரை குறைவடைவதற்கு தென்னை மரங்களை பராமரித்தல், பசளை இடல் பலவீன மட்டத்தில் காணப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் எதிர்வரும் ஆண்டுகளில் தென்னை விளைச்சல்களில் கனிசமான வளர்ச்சியை எதிர்பார்க்க முடியும். | |
| (ஊ) | நெதகமுவ மரமுந்திரிகை செயலாக்க நிலையத்தில் தோல் மரமுந்திரிகை களஞ்சியம் பல ஆண்டுகளாக பழுதுபார்க்கப்பட்டு இருக்காததுடன் களஞ்சியத்தில் தோல் மரமுந்திகைகளை களஞ்சிய படுத்தும் போது, தோல் மரமுந்திர்கைக்கு காற்ரோட்டம் கிடைக்குமாறு சனல் சாக்குகள் அல்லது வலை சாக்குகளை பயன்படுத்தாது பொலிசெக் வகையிலான உறைகள் பயன்படுத்துவதன் காரணமாக நல்ல நிலையிலுள்ள தோல் மரமுந்திரிகைகள் பழுதடைந்திந்தன. | நெதகமுவ மரமுந்திரிகை செயலாக்க நிலையம் மிகவும் பழைய கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்படுவதுடன் செயலாக்க தேவைகளுக்கு பொருத்தமானவாறு நவீனமாக்குவது கடினமான நடவடிக்கை ஆகும். பழைய கட்டிடத்தை அகற்றி புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதால் இந்த பிரச்சினைக்குரிய நிலைமைகளை தவிர்த்துக் கொள்ள முடியுமான போதும் அதற்காக போதிய நிதி ஏற்பாடு கூட்டுத்தாபனத்திடம் இல்லை. அவ்வாறே வருடாந்த தோல் மரமுந்திரிகை விளைச்சல் செயலாக்க நடவடிக்கைக்காக நெதகமுவ மற்றும் புத்தளம் செயலாக்க நிலையங்களிற்கு அனுப்பப்படுகின்றன. அந்த இருப்பை அடுக்குவதற்காக சனல் காக்குகள் மிகவிரைவில் பழுதடைவதால் தோல் மரமுந்திரிகை இருப்புக்களிற்காக பொலிசெக் உறைகள் பயன்படுத்தப்படுகின்றன. | வீணாவதை குறைத்துக் கொள்ள நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு இறுதி அளவில் மரமுந்திரிகை பயிரிடப்பட்டிருந்த நில அளவு மொத்தமாக 3,449 ஏக்கர்களாக இருந்தன. அம் மரங்களின் பதிவழிக்கப்பட்ட தேறிய பெறுமானம் ரூபா 24,159,359 தொகையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அம் மரமுந்திரிகை மரங்களை கணக்கெடுப்பு மேற்கொள்ளல், மரங்களை இலக்கமிடல் மற்றும் மரங்கள் தொடர்பான பதிவேடொன்றை தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | இம் மரமுந்திரிகை மரங்களை கணக்கெடுக்கும் ஆரம்ப நடடிவக்கைகளை தற்போது ஆரம்பித்துள்ளதுடன், எதிர்வரும் ஆண்டில் விளைச்சல் காலத்திற்கு முன்னர் அந் நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த கணக்கொடுப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்த பின்னர் அதன் அடிப்படையில் மரமுந்திரிகை மர பதிவேட்டை தயாரிக்கும் நடவடிக்கையும் பூர்த்தி செய்யப்படும். | சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |

## 3.2 நிதியக் குறை பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்திற்கு 06 நடைமுறை வங்கி கணக்குகள் மற்றும் 05 சேமிப்பு வங்கிக் கணக்குகள் நிலவியதுடன் அவற்றில் 02 நடைமுறை கணக்குகள் மற்றும் 03 சேமிப்புக் கணக்குகள் நீண்டகாலமாக இயக்கப்படாமல் இருப்பதுடன் அவற்றின் கூட்டுத் தொகை முறையே ரூபா 23,343 மற்றும் ரூபா 306,966 ஆனது. அந்த 05 செயலற்ற கணக்குகளையும் மூடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | தற்போது கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு, இலங்கை வங்கியின் 02 நடைமுறை கணக்குகள் (1633704 மற்றும் 1633705 இலக்கங்களைக் கொண்ட நடைமுறை கணக்குகள்) மற்றும் இலங்கை வங்கியின் 01 சேமிப்புக் கணக்கு (1649789 இலக்கம் கொண்ட சேமிப்புக் கணக்கு) தவிர்ந்த ஏனைய அனைத்து வங்கிக் கணக்குகளையும் மூடுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | செயலற்ற வங்கிக் கணக்குகளை மூடிவிட வேண்டும். |
| (ஆ) | கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கிராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்ட பயிர்செய்கை அபிவிருத்தி, சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் மன்னார், கொண்டச்சி தோட்ட மறுசீரமைப்புத் கருத்திட்டத்திற்காக மூன்று சந்தர்ப்பங்களில் கூட்டுத் தொகை ரூபா 225,000,000 வழங்கப்பட்டு 2021 திசெம்பர் 31 அனறு அக் கருத்திட்டத்தை பூர்த்தி செய்ய உத்தேசப்பட்டிருந்த போதும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் ரூபா 78,761,352 செலவிடப்பட்டு மீதியான ரூபா 137,236,648 விளைவற்று காண்பிக்கப்பட்டது. | கொண்டச்சி தோட்ட மறுசீரமைப்பிற்காக கிடைத்துள்ள ரூபா 225,000,000 ஆன ஏற்பாடுகளிலிருந்து 2023.10.31 திகதியளவில் ரூபா 89,428,585 தொகை குறித்த கருத்திட்ட கடமைகளிற்காக செலவிடப்பட்டுள்ளது. அவ்வாறே 2023.10.31 திகதியின் பின்னர் தோட்டத்தின் புதிய மரமுந்திரிகை பயிரிடப்படும் நிலப் பகுதியில் காடுகளை அகற்றுதல் மற்றும் குழிகளை வெட்டுதல், தோட்டங்களிற்காக விவசாய உபகரணங்கள், கள உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் தோட்டத்தில் நிர்மாணிக்கவுள்ள சுற்றுலா விடுதிற்காக மின் உபகரணங்கள் மற்றும் அலுவலகம் உபகரணங்களை கொள்வனவு செய்தல் போன்ற பணிகளிற்குரிய பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதுடன், அதன் பிரகாரம் இறுதி கட்டத்திலுள்ள பெறுகைகள் நடவடிக்கை ஊடாக எதிர்வரும் குறுகிய காலத்தினுள் மேலும் செலவிட எதிர்பார்க்கும் தொகை ரூபா 23,787,649 ஆகும். ஏனைய முக்கிய செலவினங்கள் தொடர்பான பெறுகைகள் நடவடிக்கைகளும் ஆரம்பித்துள்ளதுடன், அதன் பிரகாரம் திட்டமிட்டவாறு 2023.12.31 அன்று அல்லது அதற்கு முன்னர் இந்த கருத்திட்ட செயற்பாடுகளை பூர்த்தி செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிதியத்தை ஆக்கபூர்வமாக மற்றும் திறமையாக பயன்படுத்த வேண்டும். |

**3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 3 மோட்டார் வண்டிகள், 2 லொரி வண்டிகள், ஒரு டிரக் வண்டி மற்றும் 2 மோட்டார் சைக்கில்கள் 2023 நவம்பர் 30 திகதி வரையும் திருத்தப்படாது ஊர்திச் சாலைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன | அவசர திருத்த நடவடிக்கைகள் கூட்டுத்தாபன வாகன திருத்த நடைமுறைகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஊர்திச் சாலைகளிற்கு உட்படுத்துவதுடன், சில சந்தர்ப்பங்களில் அவசரமாக ஊர்திச் சாலைகளிற்கு உட்படுத்தப்படும் வாகனங்களின் திருத்தங்களிற்குரிய பெறுகை நடவடிக்கைகள் உரியவாறு பூர்த்தி செய்யப்படும் வரை அந்த வாகனங்கள் கனிசமான காலப் பகுதி ஊர்திச் சாலையில் நிருத்தி வைக்கும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் வாகன திருத்த வேலை நடைமுறைகள் உரியவாறு பின்பற்றப்பட்டு கூடிய விரைவில் குறித்த திருத்த வேலைகளை பூர்த்தி செய்து கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | திருத்த வேலைகளை மேற்கொண்டு அந்த சொத்துக்களை பயன்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். |
| (ஆ) | புத்தளம் செயலாக்க நிலையத்தில் பௌதீக நிலைமை பரிசோதனையின் போது ரூபா 7.092 மில்லியன் செலவில் மரமுந்திரிகை தன்னியக்க செயலாக்கம் செய்வதற்காக 2021 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் விளைவற்று நிலவியது. | ரூபா 7.092 மில்லியன் பெறுமானத்தினுள் ஆரம்பமாக மரமுந்திரிகை கொதிப்பானொன்று, மரமுந்திரிகை செயலாக்க இயந்திரமொன்று மற்றும் 02 மரமுந்திரிகை உளர் இயந்திரங்கள் காணப்பட்டதுடன், அவற்றில் கூட்டுத்தாபனத்தால் கட்டளையிடப்பட்டது மரமுந்திரிகை செயலாக்க இயந்திரம் மற்றும் இரண்டு மரமுந்திரிகை உளர் இயந்திரங்கள் மாத்திரமாகும். நிலவிய பணவீக்க சூழ்நிலை காரணமாக மரமுந்திரிகை உளர் இயந்திரத்தை வழங்க முடியாதென குறித்த வழங்குனரான சஹேஸ் இன்டஸ்ரீஸ் நிறுவனத்தினால் அறிவித்து கூட்டுத்தாபனத்திற்கு குறித்த வழங்குனரினால் ஒப்படைக்கப்பட்டது மரமுந்திரிகை செயலாக்க இயந்திரம் மாத்திரமே. அந்த செயலாக்க இயந்திரத்தை செயற்படுத்துவது தொடர்பாக நிலவிய பிரச்சினைக்குரிய நிலைமை பயன்படுத்த தாமதமானது. குறித்த வழங்குனரினால் அந்த இயந்திரத்திற்காக கொடுப்பனவைக் கோரும் போது, குறித்த இயந்திரத்தின் செயற்பாடு தொடர்பாக பரீட்சிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் மீது இயந்திரத்தின் கொள்வனவு விலையின் 10 சதவீத பெறுமானத்தை நிறுத்திக் கொண்டு குறித்த | தேவையான திருத்தத்தை மேற்கொண்டு அந்த இயந்திரத்தை பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டியதுடன் நட்டத்தை அறவிட தேவையான முயற்சி எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொடுப்பனவை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பின்னர் அந்த இயந்திரத்தை மீண்டும் செயற்படு நிலைக்கு ஆக்கிக் கொள்ள மரமுந்திரிகை வெட்டும் இயந்திர உற்பத்தி தொடர்பான இறையான்மை அனுமதிப்பத்திரம் உரித்தான புத்தி இன்டஸ்ட்ரீஸ் நிறுவனம் ரூபா 04 மில்லியனான மதிப்பீடொன்றை சமர்ப்பித்துள்ளது. அதன் பிரகாரம் தற்போது மேற்படி செயலாக்க இயந்திரத்தின் அத்தியவசியமென இனங்கண்டுள்ள மரமுந்திரிகை வெட்டும் இயந்திரப் பகுதியை பிரதானமாக திருத்திக் கொள்ள இந்த கூட்டுத்தாபன எதிர்பார்த்துள்ளதுடன், அதற்கிடையில் மேற்குறிப்பிட்டவாறு ஆரம்ப வழங்குனரிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (இ) | நெதகமுவ செயலாக்க நிலையத்தில் காணப்படும் மின் பிரப்பாக்கி இயந்திரம், நீர் கொதிப்பான், மரமுந்திரிகை தோலினால் எண்ணெய் உற்பத்தி செய்யும் மற்றும் புத்தளம் செயலாக்க நிலையத்தில் காணப்படும் நீர் கொதிப்பான் செயலழந்து இருந்ததுடன் அவற்றை திருத்தி பயன்படுத்த அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மின் பிரப்பாக்கி இயந்திரம் மற்றும் நீர் கொதிப்பான் மிகப் பழையதான போதும் அந்த இயந்திரம் அடிக்கடி திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு செயலாக்க நிலைய நடவடிக்கைகளிற்கு பயன்படுத்தும் இயந்திரமாகும். பலதரப்பட்ட நடைமுறை காரணங்கள் மீது இவற்றின் ஒரு சில திருத்த வேலைகளின் சிறுது தாமதம் ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே மரமுந்திரிகை எண்ணெய்க்காக தற்போது சந்தையில் கேள்வி இல்லாத காரணத்தால் இந்த மரமுந்திரிகை தோல்களினால் எண்ணெய் உற்பத்தி செய்யும் இயந்திரம் பயன்படுத்தாது காணப்படுகிறது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் சந்தை காரணிகள் மாற்றத்திற்கு உட்பட்டால் தேவைக்கேட்ப சேவை நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த இயந்திரத்தை மீண்டும் குறித்த உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தும் இயலுமை நிலவுகின்றது. | திருத்தங்களை மேற்கொண்டு அந்த இயந்திரத்தை பயன்படுத்த வேண்டும். |
| (ஈ) | நெதகமுவ மரமுந்திரிகை செயலாக்க நிலையத்தில் மரமுந்திரிகை செயலாக்க கொதிப்பான் 2015 ஆண்டு முதல் செயலிழந்து மரமுந்திரிகை அவிக்கும் செயற்பாடு நின்றுள்ள காரணத்தால் தோல் மரமுந்திரிகைகளை அவித்து நூற்றிற்கு 90 இதிற்கும் 95 இற்கும் | 2017 ஆண்டின் மத்திய அளவில் நெதகமுவ மரமுந்திரிகை செயலாக்க நிலையத்தில் நீர் கொதிப்பானை திருத்துவதற்காக கேள்வி மனு கோரப்பட்டதுடன் ஒரு கேள்வி மனு மாத்தரம் கிடைத்துள்ளது. கிடைத்த கேள்வி மனுவும் மிக உயர்ந்த பெறுமானத்துடனாகையால் கூட்டுத்தானத்தில் அதன் போது | நீர் கொதிப்பானை மீண்டும் பயன்படுத்த தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | இடையிலான அளவில் பெற்றுக் கொள்ள இயலுமாக இருந்த உற்பத்தி திறன் நூற்றிற்கு 70 இதிற்கும் 80 இற்கும் இடையிலான அளவு வரை வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் காரணமாக மரமுந்திரிகை பருப்பு விற்பனையால் பெற்றுக் கொள்ள இயலுமாக இருந்த வருமானம் நூற்றிற்கு 15 இதிற்கும் 20 இற்கும் இடையிலான அளவினால் இழக்கப்பட்டிருந்தது. | அதற்காக நிலவிய ஏற்பாட்டு நிலைமையின் மீது குறித்த திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஈடுபடவில்லை. | |
| (உ) | நெதகமுவ மரமுந்திரிகை செயலாக்க நிலையத்தில் தரப்படுத்தல் மற்றும் பொதியிடல் பிரிவிற்கு 2021 ஆண்டில் ரூபா 8,100,000 செலவில் ஒரு நிமிடத்திற்கு 60 பொதிகளை பொதியிட இயலுமான தன்னியக்க பொதியிடல் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2022 ஆண்டினுள் பொதியிடப்பட்ட பொதிகளின் எண்ணிக்கை 62,265 ஆகவிருந்ததுடன் இந்த இயந்திரத்திலிருந்து உச்ச கொள்ளளவை பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த பொதியிடல் இயந்திரத்தை கொள்வனவு செய்யும் போது காணப்படும் செயலாக்க நிலையங்கள் தற்போதைய உற்பத்தி கொள்ளளவை கவனத்திற் கொண்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் கூட்டுத்தாபன செயலாக்க நிலையங்களின் உற்பத்தி கொள்ளளவு உயர்வடையும் போது உறுவாகும் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே கூட்டுத்தாபனம் முன்னர் ஒப்பீட்டு ரீதியாக பெறுமதியில் குறைந்த பொதியிடல் இயந்திரமொன்றை கொள்வனவு செய்ய திட்டமிட்ட போதும், குறித்த இயந்திரத்தினால் பெற்றுத் தரும் பொதிகளின் மாதிரி பரிசோதனையின் போது அவற்றின் பொதிகளின் நிறை தொடர்பாக கனிசமான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டதால் அந்த இயந்திரத்தை கொள்வனவு செய்வது நிராகரிக்கப்பட்டுள்ளது. அந்த முன் அனுபவமும் இந்த நவீன தொழிநுட்பத்துடன் கூடிய பொதியிடல் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக தீர்மானம் எடுக்கும் போது பயன்படுத்தப்பட்டுள்ளது. வெளித் தரப்பினருடனும் கலந்துரையாடி பொதிகளின் தரம், பொதி அளவைகளின சரியான தன்மை, பொதிகளின் நிலையான தன்மை ஆகிய விடயங்களை தொடர்பாக விஷேட கவனம் செலுத்தி இங்கு குறிப்பிடும் அளவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தின் பயன்பாடு தொடர்பாக விடயப் பொறுப்பு அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் ஆரம்ப புலனாய்வொன்றை மேற்கொண்டு வருவதுடன், அதன் பிரகாரம் எதிர்காலத்தில் விடயப் பொறுப்ப அமைச்சின் ஆலோசனையின் மீது இந்த | பெறுகைகள் நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக மற்றும் சிக்கனமாக மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இயந்திரத்தின் பயன்பாடு தொடர்பாக குறித்த தீர்மானத்தை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |

**3.4 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைய பொறுப்பாளர்களிற்காக உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மானிப்பதற்கு கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கிராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்ட பயிர்செய்கை அபிவிருத்தி, சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சினால் ரூபா 15,653,000 ஆன தொகையொன்று ஒதுக்கப்பட்டு 07 உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 அன்று இந்த உத்தியோகபூர்வ இல்லங்களை பயன்பாட்டிற்கு எடுக்க முடியுமானவாறு முழுமையாகக் நிர்மாணித்து பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த உத்தியோகபூர்வ இல்லங்களிற்கான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு ஒப்பாக சந்தையில் நிர்மாண பொருட்களின் விலை மற்றும் வேலைக் கூலி அதிகரித்ததால் குறித்த நிர்மாண பணிகளை முறையாக பூர்த்தி செய்து கொள்ள முடியவில்லை. விடய பொறுப்பு அமைச்சின் அறிவுருத்தல்கள், அங்கீகாரம் மற்றும் ஏற்பாடு பெற்றுக் கொண்டு கட்டிடங்களில் நிர்மாண பணிகள் பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அந் அங்கீகாரம் கிடைத்துடன் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாண பணிகளை பூர்த்தி செய்யும் இயலுமை காணப்படுகின்றது. | நிர்மாணம் செய்து பயன்பாடிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |